பத்திரக்கிரயம்

தனிப்பிரதி சதம் 5

முற்பணமனுப்பின்றிக் கவனிக்கப்படமாட்டா

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. II. A. 59/300 of 1939.

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

விரோதி வருஷம் (1889 ஆவணி மாதம் 28-ந் திகதி ஆரம்பமானது

[ புத்தகம் — ருக ]

யாழ்ப்பாணம்:— பிரமாதி ஞூ தை மீ உ௩ உ ( 1940 பெப்ரவரி 5 திங்கட்கிழமை )

[ இலக்கம் அ0 ]


## நல்லாசிரியர்கள் தோற்றமும் தாய்நாடும்

**வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி**

எழுத்தியல் வல்லாரினும் பேச்சியல் வல்லாரினும், சிலர் தாம் தாம் பேசுகிற அல்லது எழுதுகிற சொற்களுக்கெல்லாம் தனித்தனியே வரையறைபான சில உட்கிடைகள் (concepts) உள்ளனவென்று கருதுகிருர்கள். இதனைத் தம் நீங்காக் கடனென்றும் கொள்ளுகின்றனர். அவர்களனைவரும் நல்லாசிரியன் (classical author) என்றோ, விழுநூல (classical work) என்றோ அல்லது இவைபோன்ற வேறு சில சொற்களையோ தம்முடைய நூல்களில் பரித்து வழங்குவதில்லை. காரணம் அத்தகைய ஆசிரியர்கள் தங்காலத்தில் இல்லை என்ற எண்ணமேயாம்.

இதனை ஆழ்முகத்தான், முதற்கண் தாய்நாட்டு நல்லாசிரியனைத் தோற்றுவிக்கும் கருவிகள் யாவை? என்பதை நோக்குவோம். நோக்குங்கால், ஒரு நாடு இருக்குமாயின், முதலில் அதன்கண் வரலாற்றில் இடம்பெறத்தக்க விழுமிய நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நிகழ்ந்திருத்தல்

அரசியல் முறையில் பிரிவு பலவுடைத்தாக இருக்கின்றது. ஆதலின், இந்நாட்டின்மீது பழி கூறுவது முறையுடைத்தன்றுமென்க. இங்ஙனம் கூறுவதால், இந்நாட்டில் அரசியல் புரட்சிகள் உண்டாயின், விழுமிய நூல்கள் வெளிவருமென்று நாம் கருதவில்லை. ஆதலின் தவறான நோக்கத்துடன் ஆய்ந்து அதன்வழியாகக் கூறுகின்ற நன்மையும் தீமையும்பட்ட அக்கூற்றுக்கள் எவையாயினுமாக; அவை சாலவும் இழுக்குடையவென்க.

அங்ஙனம் ஆய்வோர் நம்முடைய நிலைமைகள் பண்டு எவ்வாறிருந்தன? இன்று எவ்வாறுள்ளன? என்ற இரு கூற்றையும் நோக்குதல் வேண்டும். அதனுடன், தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு செருமானிய ஆசிரியரும் எத்தகைய விளைவுகளுக்கிடையில் அடிபட்டனர்? எவ்வாறுயர்ந்தனர்? என்பதையும் அவர்கள் உணர்தல் வேண்டும். அங்ஙனமாயின், அவர் மாசற்ற ஒரு நன்னோக்கத்தை மிக எளிதில்

## தூத்துக்குடி சைவசித்தாந்த மகாசபை

**56-வது ஆண்டு நிறைவுவிழாத் தலைமைப்பேருரை**

[திரு. கா. சுப்பிரமணியபிள்ளை M. A. M. L.]

"வணக்கன் பாசம்
உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துணைத் தேர்த்தெனப்
பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணும்

"செம்மலர் நோன்றாள்
சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால் அற நேயம் மலிந்தவர்
வேடமும்
ஆலயந் தானும் அரனெனத்

"......................மூர்க்க ராகிப்
பின்தாந்தப் பெரும்பிதற்றுப்
பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிது
வென்ன பிராந்தி"
—சிவஞானசித்தி.
திருச்சிற்றம்பலம்.

## வானநோய் காணும் விமானிகள்

**அதிக உயரம் போகக் கூடாது**

கடல் பிரயாணம் செய்பவர் 'கடல் நோய்'க்கு ஆளாவதுபோல, ஆகாய விமானம் ஓட்டுபவர்கள் வானநோய் ஒன்றுக்கு ஆளாகின்றார்கள் என்று சொல்கிறார் காப்டன் ஹாரி ஜியார்ஜ் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர் அவர் ஓஹியோ ஆராய்ச்சிசாலையொன்றி லிருக்கிறார். பலவருடங்களாக விமானிகளின் நோய்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து பல ரச

......யத்தில் சஞ்சாரஞ் செய்துகொண்டிருப்பவர் நோய்க்காளாவது திண்ணம்.

காற்றடைத்த அறைகளோ, பிராணவாயு மூகமூடிகளோதான் நோயைத் தடுக்கப்படும், அப்படியிருந்தாலும் 20 ஆயிரம் அடிக்குமேல் பிரயாணம் செய்வது நல்லதல்ல.

## காந்திஜி - வைஸ்ராய் பேட்டி

**பிப்ரவரி முதல் மாதத்தில் நடைபெறும்**

வார்தா, ஜன. 25

மகாத்மாகாந்தி பிப்ரவரிமாசம் 4ந் திகதி காலை டில்லிக்குப் புறப்பட்டுச் செல்லுகிறுரென நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது. காந்தி-வைஸ்ராய் பேட்டி பிப்ரவரி 5 அல்லது 6ந் திகதி நடைபெறுமென்று எதிர்பார்க்

## முதலியார் இராசநாயகமவர்கள்

**வெள்ளவத்தை திரு. குல. சபாநாதன் அவர்கள்**

(முற்றொடர்)

இன்னும் இந்துசாதனம் இழுகேசரி முதலியபத்திரிகைகளின் ஆண்டு மடலகளிலும் சாதாரண வெளியீடுகளிலும் பல்வகைக் கட்டுரைகள் எழுதியுள்ளார். யாழ்ப்பாணச் சரித்

யான் நன்கறிவேன். யாழ்ப்பாணத்தவரின் பெருமையைப் பல சந்தர்ப்பங்களில் பாதுகாக்க முன் வந்த முதலியார் அவர்களின் ஆக்கிலநூல், இப்பெரும் பணியைத் தமிழர்களாயாம் எப்பொழுதும்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ௵ தைமீ ௨௬௨ திங்கட்கிழமை

## யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்

திரு. க. பொன்னம்பலமவர்கள் யாழ்ப்பாணப் பட்டினசங்கத் தலைவராகச் சர்வ சம்மதத்துடன் தெரிவு செய்யப்பட்டதையிட்டுக் கொண்ட மகிழ்ச்சி காரணமாக அவருடைய வட்டாரத்திலுள்ளவர்கள் இற்றைக்குச் சில தினங்கட்கு முன்னர் ஸ்ரான்லி வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு கூட்டங்கூட்டி அவரைப் பெரிதும் உபசரித்தனர். அந்த உபசரணைக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் நன்றி கூறும் பொழுது இப்பட்டினசங்கத்தின் சோலைவரி முதலியவற்றைப்பற்றியுள்ள சில மர்மங்களையும் வெளியிட்டனர். சோலைவரி காலத்திற்குக் காலம் ஏறிவருகிறதென்பது இப்பட்டினவாசிகளின் முறையீடாகும். இம்முறையீட்டிற்குப் பதில் சொல்லும்போது இப்பட்டினசங்கப் புதிய தலைவர், இப்பொழுதும் இங்கு அறவிடப்படும் வரி விகிதம் அதிகப்படவில்லை யென்றும், முந்திக் காணி மதிப்பிட்டவர்களைக் காட்டிலும் இப்பொழுது காணி மதிப்பிடுபவர்கள் இதற்கெனப் பயிற்றப்பட்டமையின் மிகவும் நுட்பமாக மதிப்பிடக் கூடியவர்களென்றும், இப்பொழுது மதிக்க நியமிக்கப் பட்டுள்ளவர்கள் செல்வர்கட்குச் சகாயஞ் செய்தலென்ற தோஷமில்லாமல் எல்லார்க்கும் ஒரேவிதமாக நீதியுடன் மதிப்பார்களென்றும், நூற்றுக்குப் பத்து விகிதமே இதுகாறும் அறவிடப்பட்டு வந்த வரியென்றும் மலகூடங்கள் எங்கும் அமைக்கத்தொடங்கிவிட்டபடியால் இனிமேல் நூற்றுக்குப் பன்னிரண்டரை விகிதம் வரியறவிடப்படுமென்றும் இப்ப அறவிடப்படின் இப்பொழுதுள்ள வருவாயைக்காட்டிலும் 10000 ரூபா வருடந்தோறும் மேலதிகமாக வருதல் கூடும் என்றும் தெரிவித்தார். மேலும் இலங்கையில் நகரபரிபாலன சங்கம் பட்டின பரிபாலன சங்கங்களுக்குக் கீழுள்ள பட்டினங்களெல்லாவற்றிலும் இந்த யாழ்ப்பாணப் பட்டினவாசிகளே குறைந்த விகிதமான சோலைவரி இறுக்கிறார்களெனவும் மேற்படி சங்கத் தலைவர் எடுத்துக்காட்டினார்.

இப்பட்டினத்திற்கு நகரபரிபாலனமுறை வருமோ என்ற கேள்விக்கு, இப்பொழுது நகரபரிபாலன முறையால் நாம் அடையக்கூடிய நன்மைகளை இப்பட்டினவாசிகள் ஒருவாறு விளங்கி வருதலினால் 1942-ம் ஆண்டு வரையில் நகரபரிபாலன முறை உருதல்கூடுமென்றும் திரு. பொன்னம்பலமவர்கள் தெரிவித்தார்;

புதிய சபைத்தலைவர் கூறியவை அத்தனையும் நிசம், மேலும் பட்டினவாசிகட்கு ஒரு அளவிற்கு அவை மகிழ்ச்சியைத் தருவனவாகும். ஆனால் இப்பட்டினம் இன்னமும் வேண்டிய சுகாதார நிலையில் இருக்கவில்லையென்பதையும் இங்கு ஆவசியகஞ் செய்ய வேண்டிய திருத்தங்கள் பலவுள வென்பதையும் நாது புதியதலைவர் மறுக்கமாட்டார். யாழ்ப்பாணப் பட்டினத்திற் சில வட்டாரங்களில் இன்னுந் தெருக்கான்கள் பொல்லாத துர்நாற்றத்தோடுகூடிய அழுக்கு நீரோடுஞ் சகதியோடுஞ் செறிந்திருக்கின்றனவே; இவைகளுட்பிரதானமானவை செம்மாதெருவிலுள்ள கான், சிவன்கோவில் மேற்குவீதியிலுள்ள கான், நல்லதண்ணீர்க் கிணற்றடித் தெருவிலுள்ள கான் ஆகிய இவைகளாகும். இந்தப் பகுதியில் வசிப்பவர்களைப் பீடித்து வருத்துதற்காகிய நோய்களைப் பிறப்பித்தற்கு மேலே சொல்லப்பட்ட கான்கள் போதியனவாகுமே. அல்லாமலும் இந்த இடங்கள் இப்பட்டினத்தின் பிரதானமான பாகத்திலுள்ளனவல்லவா?

இனி, இப்பட்டின எல்லைக்குள் வழிப்போக்கராயுள்ளவர் மலசல உபாதியை நீக்கிக்கொள்வதற்காகிய பொது மலகூடங்கள் யாதுமில்லையே! அப்படியேதும் மலகூடங்கள் இருப்பினும் அவைகள் பிரசித்த தெருக்களல்லாத் தெருக்களில் மாத்திரம் உள்ளனவெனலாம். இந்தப் பெருங் குறைகளை, இனிமேல் இச்சங்கத்திற்கு வரவிருக்கும் மேலதிக வருவாயாகிய பதினாயிரம் ரூபாவில் ஒருபாகத்தைச் செலவிட்டாயினும் நமது பட்டின சங்கப் புதிய தலைவர் மேலே சொல்லப்பட்ட குறைவுகளை நிவிர்த்திசெய்வாரெனப் பட்டினவாசிகள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

## பட்டின வரியிறுப்போர் மத்திய சங்கம்

யாழ்ப்பாணப் பட்டின வரியிறுப்போர் சங்கத்தின் மத்திய கூட்டமொன்று இம்மாதம் 7-ம் திகதி புதன்கிழமை மாலை 5 மணியளவில் ஸ்ரான்லி ரேட்டில் உள்ள 73 ம் இலக்க வீடாகிய சங்கக்காரியாலயத்தில் நடைபெறும். அன்று ஆலோசிக்கப்படும் விஷயங்களில் பிரதானமானது சோலைவரி மதிப்பைக் கூட்டியதைப் பற்றியது ஆகும்.

## சைவப்பிரசாரணம்
### திருக்கோணமலை

பெப், 1

சென்ற சனிக்கிழமை 27ந் தேதி பிற்பகல் 7 மணியளவில் திருக்கோணமலை விளையாட்டு முன்றிலுக்கருகாமையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்,திரு. ஆலடிவிநாயகர் சந்நிதானத்தின்கண் ஆசிரியர் திரு. ப. சிவசேகரமவர்களின் தலைமையின்கீழ் ஓர்இனிய சைவப்பிரசங்கம் நடாத்தப்பட்டது.

பிரசாரணராய் வரவழைக்கப் பட்டவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்த் தலைமைப் போதகாசிரியரும், இந்துசாதனப் பத்திராசிரியருமாய, பண்டிதர் திரு. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளையவர்களாவர்.

பிரசாரணர், 'ஆலயவழிபாடு' என்னும் விடயம்பற்றிப் பிரசங்கித்தார். தாம் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட இவ்வரிய விடயத்தை இனிய வசனநடையில் பற்பல கதைகள் மூலமாய் சபையோருக்குச் சுருக்கிச் சொல்லி விளங்க வைத்துளார்.

இப்பண்டிதப் பெரியார், சைவநூற்களின்பாற் கொண்ட வித்துவத் தன்மையையும் இவரது சைவ ஒழுக்கத்தின் மகிமையையுங் கண்ணுற்றவர்களும், பேச்சு வன்மையைச் செவியுற்றவர்களுமாய சபையோர் மறுநாட்காலையும் ஓர் பிரசங்கஞ் செய்யும்வண்ணம் பண்டிதர் அவர்களை வேண்டினர்.

பண்டிதர் அவர்களும் அதற்கிணங்கி மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணியளவில் "சைவாபிமானம்" என்னும்விடயம்பற்றிச் சொற்சுவை பொருட்சுவை நகைச்சுவை ததும்ப ஓர் இனிய சொற்பொழிவாற்றினர்.

இவரது இரு பிரசங்கங்களும் சபையோரால் மிகவும் வியக்கப்பட்டதாகையால், இன்னும் பற்பல பிரசங்கங்கள், இங்கு செய்யும்வண்ணம் பண்டிதரைச் சபையோர் வேண்டினர். ஆனால், இந்துசாதனக் காரியாலயத்திலும் இந்துக்கல்லூரியிலும் ஆவசிய கடமைகளாற்ற வேண்டியிருப்பதால் தாம் இங்கு தங்குவதற்கு நேரமில்லை யெனவும் ஆதலால் தம்மை மன்னிக்கும் படியும் பண்டிதரவர்கள் கூறினார்.

சைவாபிமானிகள் பண்டிதர் அவர்களின் பிரசங்கங்களை இன்னும் இன்புற மிகவும் ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். சடித.

## தானவரவு

இலகாலம் இப் பத்திரிகையின் ஆக்கில உதவிப் பத்திராசிரியராகவிருந்து காலஞ்சென்ற வண்ணார்பண்ணை கிழக்கு ஸ்ரீ. ச. சிவகுருநாதரவர்களின் சிரேஷ்ட புத்திரன் திரு. சி. இராஜதுங்கமவர்கள் அபரக்கிரியையில் அவரது சகோதரன் ஸ்ரீ S. U. சோமசேகர மவர்களால் ஷை சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும்.

ஷைசபைத் தனாதிகாரி.

# 3 எதிரிகளுக்கும் மரண தண்டனை

## இளவாலை முக்கொலை வழக்கில் தீர்ப்பு

### 1ம் எதிரியின் ஆசைநாயகி ஓலமிட்டு அழுதாளாம்

கண்டி, பெப் 2

கண்டிச் சப்பிறீங்கோட்டில் 16 தினங்களாக நடைபெற்றுவந்த இளவாலை முக்கொலை வழக்கில் இன்று நீதிபதி மோஸ்லி மூன்று எதிரிகளுக்கும் மரணதண்டனை விதித்தார்.

முதலாம் எதிரியாகிய காராளி முத்தையா என்பவன் வீட்டுக்குக் கன்னக்கோலிட்டுக் கொள்ளையடித்து மூன்று பேரைக் கொலை செய்தானென்ற குற்றச்சாட்டின் பேரிற் குற்றவாளி என்பதாக ஜூரிகள் ஏகமனதாக அபிப்பிராயந் தெரிவித்தார்கள். இரண்டாம் எதிரியாகிய நட்சத்திரம் செல்லையா என்பவனும் மூன்றும் எதிரியாகிய சவரிமுத்து அந்தோனிப்பிள்ளையும் மேற்கூறிய குற்றச்சாட்டுகளின் பேரிற் குற்றவாளிகளென ஆறு ஜூரிகள் அபிப்பிராயந் தெரிவித்தனர்.

நீதிபதி கேட்ட கேள்விக்குப் பதில் கூறமிட்டு, முதலிரண்டு எதிரிகளும் தங்கள்மீது இரக்கங் காட்டவேண்டுமென வேண்டிக்கொண்டனர். 3வது எதிரி தாம் குற்றங்கள் நடைபெற்ற காலத்திற் கிளிநொச்சியில் இருந்ததாகக் கூறினான்.

இராசகுட்டி, குருசாமி என்ற சாட்சிகளின் வாக்குமூலம் திருப்திகரமற்றவையென ஜூரிகள் அபிப்பிராயந்தெரிவித்ததின் பேரில், நீதிபதி இவ்விஷயத்தைப்பற்றி வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு தாம் அற்றேணிஜெனரலுக்கு அறிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

எதிரிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டவுடன், முதலாம் எதிரியின் ஆசைநாயகியாகிய சிசிலியா என்பவள் கோட்டில் ஓலமிட்டு அழுதாள்.

## கொட்டடியிற் பொல்லடி

### 1ம் எதிரிக்கு அபராதம் 2ம் எதிரிக்கு விடுதலை

#### சாக்ஷிக்கு நீதிபதியின் கண்டனம்

யாழ்ப்பாணம் 2-2-40

கொட்டடியில் வசிக்கும் பொன்னு-வேலாயுதமும் காவாந்துறையில் வசிக்கும் அம்பலம்-ஐயம்பிள்ளையுமாகியவருள் முதலாம் எதிரி கொட்டடியில் வசிக்கும் நாகமணி-சிவஞானத்திற்குப் பொல்லாலடித்துப் படுகாயம் வருவித்ததாயும் இரண்டாமெதிரி சாதாரண காயம் வருவித்ததாயும் குற்றஞ் சாட்டிய வழக்குப் பொலிஸ் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின் நீதிபதி முதலாம் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ரூபா 20 அபராதமும் இரண்டாம் எதிரியைக் குற்றவாளியல்லவெனக் கண்டு விடுதலையும் விதித்தார். வழக்காளி பக்கத்துச் சாக்ஷிகளுள் ஒருவராகிய காராளி-நாகமணியை நீதிபதி அழைத்து நீ பொய்ச்சாக்ஷியம் கூறியதாக உன்மீது என் குற்றஞ் சாட்டக்கூடாதென நியாயம் கூற உன்னிடம் ஏதாவதுண்டாவெனக் கேட்டார். அவன் அதற்கு ஒன்றுமில்லை என்றும் தான் உள்ளதையே கூறியதாகவும் கூறினான். நீதிபதி "நீ பாத்திரமல்லாமல் உனது மனைவியும் பொய்ச்சாக்ஷியம் கூறியிருக்கிறாள். அவளையும் கூப்பிட்டுத் தண்டனை விதிக்கவேண்டியது. ஆனால் உனக்குத் தண்டனை விதித்தால் அது அவளையும் பாதிக்குமென்ற நோக்கத்தால் அவ்வாறு செய்யாது விடுகிறேன். நீ விவேகமுள்ளவனாகக் காணப்படவில்லை. இவ்வழக்கை யாரோ ஒரு கோட்டுப் புலிதான் பின்னின்று உங்களுக்கு வழிகாட்டி ஆயத்தஞ் செய்துவிட்டிருக்க வேண்டுமென நான் நினைக்கிறேன். முதல் ஒருவகையாயும் பின்னர் வேறொருவகையாயும் நீ சாக்ஷியம் கூறியிருக்கிறாய். ஆனபடியால் கோட்டுப் புலிகளைப் பிடித்துத் தண்டிப்பதற்கு எனக்கு வசதி ஏற்படாமையால் உங்களைப் போன்றவர்களைத் தண்டித்தால் மற்றையவர்கள் இதனை அறிந்து திருந்தி நடப்பார்கள். அல்லாமலும் கோட்டுப் புலிகள் இப்படி வழக்குகளின் வந்து சம்பந்தப்படுவதால் அநேக வழக்குகளின் உண்மையையறிந்து கொள்ள முடியாதிருக்கின்றது. ஆகவே உனக்கு ரூபா 30 அபராதம் விதிக்கிறேன். அபராதப்பணம் கட்டத்தவறினால் ஒருமாதக் கடூழிய மறியற்றண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

க. கி.

## பயமுறுத்தலும் சேதம் விளைத்தலும்

### வழக்காளி கடைசி 6 எதிரிகளுக்கு நஷ்டப்பணம் கொடுக்கத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், 1-2-40.

சுதுமலையில் வசிக்கும் (1) K. வேலுப்பிள்ளை (2) M. கந்தன் (3) K. கந்தன் (4) V. பண்டாரி (5) S. நாகமுத்தன் (6) N. கந்தன் (7) P. தம்பையா (8) S. சரவணமுத்து (9) A. சரவணபவன் (10) K. சதாசிவ மாகியோர் அவ்வூர் முத்துவின் மகன் சின்னப்பிள்ளையினுடையவளவுக்குள் சட்டவிரோதமாகச்சென்று அவ்வளவை மரியாதையீனமாக வைததாயும், முதலாம் எதிரி அவருக்கு அடித்ததாயும், இரண்டாம் எதிரி கத்திகொண்டு பயமுறுத்தியதாயும் இரண்டாம் மூன்றும் காலாம் எதிரிகள் அவருக்குரிய கமுகமரங்களையும் தென்னம்பிள்ளைகளையும் வெட்டியதாயும் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் பின் நீதிபதி 1ம் 2ம் 3ம் 4ம் எதிரிகள் வழக்காளியாகிய சின்னப்பிள்ளையின் மரங்களை வெட்டவேண்டுமென்று வெட்டவில்லையென்று சாக்ஷிகள் மூலம் தான் அறிவதாயும் அவர்கள் வழக்காளிக்கு விரோதமாகத் தங்களுக்குரிய காணி ஆட்சியை எடுக்கச் சென்றார்களென்று சாக்ஷிகள் மூலம் பெறப்படுகிறதென்றும் கூறி அவர்களை விடுதலை செய்தார். மேலும் வழக்காளி 5ம் எதிரி தொடக்கம் 10ம் எதிரி வரையிலுள்ளோருக்கு வேணுமென்று தொந்தரவு கொடுக்கும் நோக்கமாக அவர்கள்மீது குற்றஞ் சாட்டி வழக்குத் தொடுத்ததாய்த் தான் விளங்குவதாயும், இப்படி அநாவசியமாய் மனிதரைக் கோட்டுக்கு இழுப்பது யாழ்ப்பாணத்தில் சகசமாக வருகிறபடியால் அதற்கு இடமாக வழக்காளியை 5ம் எதிரி தொடக்கம் 10ம் எதிரி வரையிலுள்ளோர்க்கு நஷ்டப்பணமாக ஆளுக்கு ஐவைந்துரூபா கொடுக்கும்படியும் கூறினர். க. கி.

## மூலாயச் சம்பவ விசாரணை

### திரு. வி. குமாரசுவாமி அவர்கள் நியமனம்

பெப், 3

மூலாயத் தோட்டத்திற் சென்ற ஜனவரிமாசம் 10ம் திகதியன்று பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததைப்பற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி திரு. வி. குமாரசுவாமியை விசாரணைக் கொம்மிஷனராக மே. த. தேசாதிபதி நியமித்திருக்கிறார்.

நேற்றுத் தேசாதிபதியின் காரியாலயத்திலிருந்து மேற்படி கொம்மிஷன் நியமனம் பற்றிய ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் மூலாயத் தோட்டத் துப்பாக்கிப் பிரயோகம்பற்றியும், துப்பாக்கிப் பிரயோகத்தில் கோவிந்தன் என்னும் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டதுபற்றியும் விசாரணை நடத்தி அறிக்கை செய்துகொள்வதற்காகத் திரு.குமாரசுவாமி நியமிக்கப்பட்டிருக்கின்றாரென்று கூறப்பட்டிருக்கிறது.

## பல்வைத்திய விளம்பரம்

யப்பானிய பல் வைத்தியரான எல்லிஸ் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள திருச்செல்வம்பில்டிங்கில் 1940-ம் ௵ பெப்ருவரி௴ 7-ம் திகதிதொடக்கம் 16-ம் திகதிவரையில் பல்வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பார்.

Mis 266 5-2-40

# மானபங்கஞ் செய்ய முயற்சியா?

## வதுளை இராக்கோச்சில் ஒரு ஸ்திரீயைக் கக்கூசுக்குள் இழுத்துச் சென்றனராம்

### பிரங்கிப் படையைச் சேர்ந்த இருவர்மீது வழக்கு

நுவரெலியா, பெப் 1

பிரங்கிப்படையைச் சேர்ந்த ஜே. பிரவுண்ஹில், ஜே. ஸ்மித் என்னும் இருவரும் கொழும்பிலிருந்து வதுளைக்கு இராக்கோச்சிற் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த வதுளைவாசியும் 62 வயதுள்ளவருமான ஸ்ரீமதி ஆர். கந்தையா என்னும் வயோதிகமாதைத் தொந்தரவு செய்ததாகக் குற்றஞ்சாட்டி நுவரெலியாப் பொலிஸ் இன்ஸ்பெக்டரால் தொடரப்பட்ட வழக்கு, நேற்று நுவரெலியாப் பொலிஸ் கோட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாது கூறிய வாக்குமூலம்

ஸ்ரீமதி ஆர். கந்தையா கூறியதாவது:-

நான் இராக்கோச்சில் வதுளைக்குப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தேன். நான் இருந்த ஸ்திரீகள் வண்டியில் எனைத்தவிர, வேறுபெண்கள் யாரும் பிரயாணஞ் செய்யவில்லை. இரவு வெகுநேரம் சென்றபின், இராணுவ உடைதரித்த ஓர் ஐரோப்பியர் எனது வண்டிக்குட் பிரவேசித்து என்னோடு வார்த்தையாட ஆரம்பித்தார்.

எனக்கு ஆங்கிலந் தெரியாதென்றும் அவர் ஸ்திரீகள் உட்காரும் வண்டிக்குவந்திருப்பதாகவுஞ்சொன்னேன். அதன்பின் அவர் எனது அறையிலிருந்து போய்விட்டார். அடுத்த ஸ்டேஷனில் வண்டி நிற்கவும் அவரும் இராணுவ உடைதரித்த மற்றொருவரும் என் அறைக்குத் திரும்பிவந்தார்கள்.

கக்கூசுக்குள் இழுத்துச் சென்றனர்

அவ்விருவரும் என்னை அந்த அறையிலுள்ள கக்கூசுக்குள் இழுத்துச் சென்றார்கள், என் வண்டிக்குப் பக்கத்து அறை றெயில்வே 'காட்'டினுடையது. எனவே உதவிக்குக் கூக்குரலிட்டேன். சத்தத்தைக் கேட்டு இராணுவஉடைதரித்திருந்த ஒரு சிங்களவர் அவ் வண்டிப்பக்கமாக வந்தார். அதன்பின், குறித்த இருஐரோப்பியர்களும் அங்கிருந்து வேறு வண்டிக்குப் போய்விட்டனர்.

பிரங்கிப்படையைச் சேர்ந்த ஒத்னலர் டி. கிறூ. டப்ளியூ. குணரத்ன கூறியதாவது:-

இராக்கோச்சில் நான் தியத்தலாவைக்குப் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தேன். இரவு 11-30 மணிக்கு நான் சாப்பாட்டு வண்டியில் இருந்தேன். அப்பொழுது ஒருமாது உதவிக்காகக் கூக்குரலிடுஞ் சத்தங் கேட்டது. சத்தம் வருந் திசையை நோக்கி நான் ஓடினேன். அங்கு குறித்த அறையிற் பிரங்கிப்படை உடைதரித்த ஒருவன் ஸ்ரீமதி. ஆர் கந்தையாவைத் தொந்தரவு செய்வதைப் பார்த்தேன். உடனே முட்டாள்தனமாக நடந்துகொள்ள வேண்டாமென்று நான் அவனிடஞ் சொன்னேன். அவர் எனது வார்த்தைக்குச் செவிசாய்க்காததால் நான் அங்கிருந்து அவரை மற்றொருவண்டிக்கு இழுத்துக்கொண்டுபோய் விட்டேன். பின்னர் நான் ஸ்ரீமதி கந்தையாவிருக்குமிடம் திரும்பிச் சென்று அவருடைய வண்டியைப் பூட்டிவிட்டு வெளியிற் காவலுக்கு நின்றேன்.

அம்மாது இராணுவப்படையைச் சேர்ந்த இருவரால் கக்கூசுக்குட் பலாத்காரமாக இழுத்துச் செல்லப் பட்டதைப்பற்றி என்னிடம் முறைப்பாடு செய்துகொண்டார். வண்டி தலவாக்கலை வந்து சேரவும் மேற்படி சம்பவம் பற்றி நான் புகையிரதக் "காட்"டிடம் தெரிவித்துக்கொண்டேன்.

தியத்தலாவையில் பிரங்கிப்படையினருள் எதிரிகள் எவர் என்பதை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு ஓர் அணிவகுப்புநடந்தது. அப்பொழுது ஜே. பிரவுண்ஹில்லும் ஜே. ஸ்மித்தும் எதிரிகள் என்பதாக இனங் காட்டப்பட்டனர்.

எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்லர் என்றனர். வழக்கு பெப்ருவரி௴ 14ம் திகதிக்குத் தவணை போடப்பட்டது.

## கண்டியில் வெடி விபத்து

### புதிய பாடசாலைக்கட்டிடம் இடிந்து விழுந்தது

கண்டி, ஜன 28உ

கண்டி நகரிலுள்ள அம்பிட்டியா ஆங்கிலப் பாடசாலையிற் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடப்பகுதி வியாழக்கிழமை இரவு ஒரு வெடி விபத்துக் காரணமாக இடிந்து விழுந்துவிட்டது. இக் கட்டிடம் ஒப்பந்தகாரரால் கட்டி முடிக்கப்பட்டதன் பின்னர் வியாழக்கிழமை காலை 'ஜூனியர்' வகுப்பு மாணவர்கள் அங்கு கற்பதற்கு அமர்ந்தனர்.

வியாழக்கிழமை இரவு பலத்த சத்தத்தோடு ஒரு வெடி முழக்கங் கேட்டது. அடுத்தாற்போலக் கட்டிடம் தகர்ந்து விழுந்த சத்தமுங் கேட்டது. வெடி விபத்து நிகழ்ந்த சிறிது நேரத்திற்குட் பொலிசார் அங்கு வந்து பரிசோதனை நடத்தினர்கள். இடிந்து விழுந்து கிடந்த கட்டிடக் குவியலுக்குள் எரிந்துபோன ஒரு மின்சார உருக்குக் கம்பி கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குறித்த புதிய கட்டிடம் "டைனமெற்" வெடியால் தகர்க்கப்பட்டிருக்கவேண்டுமெனப் பொலிஸார் சந்தேகப்படுவதாகத் தெரிகிறது.

இந்த விபத்துப்பற்றிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜி. ஜி. கிரே விசாரணை செய்து வருகிறார்.

## பூரண மதுவிலக்கை ஆதரிக்க வேண்டுகோள்

இலங்கையில் மதுபான வகைகளை உற்பத்தி செய்வதையும் விற்பனை செய்வதையும் தடைசெய்வதற்குக் காலதாமதமின்றி ஒரு சட்டம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் கொழும்பு பூரண மதுவிலக்கு மத்திய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. குறித்த பொதுக்கூட்டம் சென்றசனிக்கிழமை மாலையில் ஆனந்தாகல்லூரி மண்டபத்தில் திரு. டப்ளியூ. ஏ. டி. சில்வா தலைமையில் நடைபெற்றது.

சகலருக்குரிய வி. ஏ. எப். சேனரத்ன பின்வரும் தீர்மானங்களைப் பிரேரித்தார்:-

(1) ஸ்தல வாக்கெடுப்பினால் மூடப்பட்ட தவறணைகளை மீண்டும் திறப்பதற்கு 100க்கு 75 வாக்காளர் வாக்களிக்கவேண்டுமெனப் பொருத்தமுறை குறிக்கும் ஒரு சட்டத்தை ஏற்படுத்துமாறு இந்தச் சங்கம் அரசாங்கத்தை வேண்டிக்கொள்கிறது.

(2) இச் சட்டில தற்போது ஏற்பட்டிருக்கும் தவறுதலான அபிப்பிராயங்களை முன்னிட்டு, களியினால் மனிதரில் சுகாதாரத்திற்கு ஏற்படும் கெடுதிகளைப்பற்றி வைத்தியப்பகுதிமூலம் பூரணமாக ஆராய்ச்சி செய்யும்படி இந்தச் சங்கம் அரசாங்கத்தை வேண்டிக்கொள்கின்றது.

இந்த இரு தீர்மானங்களும் முறைப்படி ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறின.

1939-ம் ஆண்டுக்குப் புறக்கோட்டையில் நடந்த ஏலவாக்கெடுப்பில், தோற்றுப்போன மதுக்கடைகளுக்கு லைசென்சு அளிக்கப்பட்டதை இந்தச் சங்கம் பலமாக ஆக்ஷேபிப்பதாகத் திரு. டப்ளியூ. பெரேராவினால் பிரேரிக்கப்பட்ட மற்றொரு தீர்மானம் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பூரண மதுவிலக்கு

இலங்கையில் பூரண மதுவிலக்கு முறையை நடைமுறையிற் கொண்டுவருதற்குத் திரு H. W. அமரசூரிய அரசாங்கசபையிற் கொண்டுவந்திருக்கும் பிரேரணையை இந்தச் சங்கம் முழு மனதுடன் ஆதரிப்பதாகவும் அரசாங்கசபையின் இதர அங்கத்தவர்கள் இப்பிரேரணையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும் திரு. எம். பெரேராவினால் பிரேரிக்கப்பட்ட ஒரு பிரேரணை ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

## மனித நூல்
### (Anthropology)

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

(Copy Right)

மனித நூல் அறிவைப் பெறப் பல சாத்திரங்களைக் கற்றல் வேண்டும். அங்க சாத்திரமும் (anatomy) தேகசாத்திரமும் மனித உடலமைப்பை அறிதற்கு உதவி புரிகின்றன. மனித உள்ளம் வேலைசெய்யும் போக்கை ஆராய்தற்கு மனோ தத்துவ ஆராய்ச்சி வேண்டியிருக்கிறது. மொழியாராய்ச்சி மொழிகளுக்கும் மொழிகளைவழங்கும் மக்களுக்குமுள்ள தொடர்பை அறிய உதவி புரிகின்றது. நீதிநூல் மனிதரின் ஒழுக்கத்தையும் அவர்கள் தமக்குள் நடந்துகொள்ள வேண்டிய பிரமாணங்களையும் விளக்குகின்றது. சனசமூக வளர்ச்சி நூல் மக்களின் நாகரீகம், கலை, அறிவு, கொள்கை, நம்பிக்கை, பழக்கவழக்கம், நியாயப் பிரமாணங்கள் முதலியவற்றை அறிவிக்கிறது. சனசமூக வளர்ச்சிக் காலங்களைச் சரித்திரத்தால் நேராக அறியலாம். சரித்திரத்துக்கு அப்பாற்பட்ட பொருள்கள் பழம் பொருள் நிலநூல் ஆராய்ச்சிகளால் அறியப்படும்.

அங்க சாத்திரமும் தேக சாத்திரமும் மனிதனின் உடலமைப்பு மிருகங்களுக்குக்கிட்ட இருக்கின்ற தென்பதைப் புலப்படுத்துகின்றன. உட்கருவிகளின் அமைப்பிலும் அவை தொழிற்படும் முறையிலும் மனிதன் மிருகமாகவே இருக்கின்றான். மனிதன் பழக்கித் தனக்குத் தொழில் புரிய வைத்திருக்கும் அல்லது உணவுக்காகக் கொல்லும் மிருகங்களைப்போலக் கடவுள் அவனையும் உண்டாக்கியிருக்கிறார்.

மேலினக் குரங்குகள் உடலமைப்பில் மனிதனுக்குக்கிட்ட இருக்கின்றன. கொறிலா என்னும் மனிதக் குரங்கு உருவில் மனிதனை ஒத்திருக்கின்றது. ஆனால் அதன் உறுப்புகளுக்கும் மனித உறுப்புகளுக்கும் வேற்றுமை உண்டு. இது பார்த்த மாத்திரத்தில் கண்ணுக்குப் புலப்படும். மனிதக் குரங்கின் மண்டை சிறியது; உடல் பெரிது; கீழ் உறுப்புகள் கட்டையானவை; மேல் உறுப்புகள் கீழ் உறுப்புகளிலும் நீண்டவை. மனிதக் குரங்கின் மண்டைக்கும் மனிதனின் மண்டைக்கும் உள்ள வேற்றுமை பெரிது. கீழ் வாய் (தாடி) எலும்பு நீண்டிருப்பதால் மனிதக் குரங்கின் முகம் அகன்றிருக்கின்றது. மனிதனின் மிகச் சிறிய மண்டை 63 கன அங்குல முள்ளது. ஆனால் மனிதக் குரங்கின் பெரிய மண்டை 34½ கன அங்குலமாயிருக்கின்றது. மனிதக் குரங்கின் மூளை 20 அவுன்ச் நிறைக்கு அதிகப்படுவதில்லை, மனிதன் மூளை 32 அவுன்சுக்குக் குறையாது. குரங்கு மனிதனை ஒத்திருந்தாலும் அது மனிதனை விடப் பல வகையில் குறைபாடுடையது.

'டாவின்' என்னும் ஆசிரியர் மனிதனின் ஆதி முன்னோர் குரங்குகள் என்று கூறியிருக்கின்றார், இக்கொள்கையின்படி பிராணிகள் படிப்படியாக முன்னேறி இனம் வேறுபட்டுப் பலவகைப் பிராணிகளாகப் பெருகியிருக்கின்றன. அம்மாறுதல்களில் மனிதன் இறுதியாக உள்ளவன். இக்கொள்கையைப் பலர் மறுக்கின்றனர்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு பிராணியும் அச்சுமாறாமல் சந்ததி பெருகும்படி கடவுளாற் படைக்கப்பட்டிருக்கிறதென்றும் ஒன்றிலிருந்து இன்னொன்று பிறக்கும் என்னும் கொள்கை ஆதாரமற்றதென்றும் மற்றொரு சாரார் கூறுவர். டக்டர் பிறிச்சாட் (Dr. Prichard) என்பவர் மனித உடற்கூறுகள் போலவே மிருக உடற்கூறுகளும் இருக்கின்றன என்றும், மனிதனைப் போலவே மிருகங்களுக்கும் சிவனும், விருப்பு வெறுப்பு அன்பு பகை பயம் பழிவாங்கும் குணம் முதலியன இருக்கின்றனவென்றும், மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உடலினால் மாத்திரம் வேற்றுமை காணப்படுகின்றதென்றும், மனிதனிருந்த உயிரைப் பொறுத்ததென்றும் கூறியிருக்கின்றார். இக்கொள்கை பிரேக்க [illegible] இக்துக்களதும் கொள்கைகளை ஒத்திருக்கின்றது.

பூமியில் ஒன்றுக்குப்பின் ஒன்றாகப் பலவகையான வெவ்வேறு இன விலங்குகள் தோன்றி விருத்தியடைந்திருக்கின்றன; விருத்தியடைந்த விலங்குகளும் தாவரங்களும் இப்பொழுது காணப்படும் இனங்களை ஒத்திருக்கின்றன. பல வேறு காலங்களில் வசித்த விலங்குகளுக்கிடையில் ஒரேவகையான தொடர்பு காணப்படவில்லை. அவைகளை இணைக்கும் சந்ததிகளும் காணப்படவில்லை. 'பலி ஒசிய' (பழைய பிராணிகள் தோன்றிய காலம்) காலத்தில் வசித்த மீன்கள் செக்கண்டரி (நடுக் காலம் உயிர் தோன்றிய காலம்) காலத்து [illegible] முற்சந்ததிகளல்ல. [illegible] (சமீபகால உயிர் தோன்றிய [illegible]) காலத்தில் வாழ்ந்த தாய்ப்பால் குடித்து வளரும் மிருகங்கள் மனிதனின் முற்சந்ததிகள் அல்ல.

இவைகளின் தொடர்புகள் புலப்படாதவையும் உயர்ந்ததன்மை உடையனவாயும் இருக்கின்றன. அவைகளின் தொடர்பை உலகைப் படைத்த ஆண்டவனிடமே கேட்டறியவேண்டியிருக்கின்றது. பூமியிலே தோன்றி வாழ்ந்த பலவகையான பிராணிகளின் சந்ததிகள் இல்லாமல் மறைந்து போயிருக்கின்றன. பழைய பிராணிகள் தோன்றிய காலத்தில் உற்பத்தியான மீன்கள் முதல் படிப்படியாக விருத்தியடைந்த பிராணிகளுள் மனிதன் முடிவானவன். இவ்வாறு அகாசிஸ் (Agassiz) என்னும் ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

(தொடரும்)

## விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் 240 ஏக்கர் தென்னந்தோட்டமும் வட்டுக்கோட்டையில் 63 ஏக்கர் திறம் தென்னந் தோட்டமும், சொந்தக்காரர் C. சிற்றம்பலம் C. C. S. வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதிக் கொள்ளுக:—

C. குமாரசாமி
C/o P. காசிப்பிள்ளை
புரொக்டர் S C.
யாழ்ப்பாணம்

Mis 365 5 & 8-2-40

## முதலியார் இராசநாயகமவர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட இனிய கட்டுரைகள் முறையே "செந்தமிழ்" எனும் மதுரைத் தமிழ்ச் சங்க மாதப் பத்திரிகையிலும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "ஞாயிறு" எனும் பருவ வெளியீட்டிலும் காணப்படும்.

முதலியார் அவர்களிலும் பார்க்க தமிழில் மட்டும் அல்லது ஆங்கிலத்தில் மட்டும் புலமை வாய்ந்த ஒரு சிலர் யாழ்ப்பாணத்திலிருக்கலாம். ஆனால் காலமும் இடமும் வாயாததனாலோ எதனாலோ அத்தகைய ஆராய்ச்சியில் அவர்கள் ஈடுபட்டு வந்தார்களல்லர். முதலியார் அவர்களுக்குத் திருமகளின் கடைக்கட் பார்வை கிடைத்தது. இதனால் மிடியெனும் கொடிய நோய் ஓட்டெடுத்தது. முதலியார் அவர்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல பயிற்சி ஒருபுறமிருப்ப, சிங்களமும், சமஸ்கிருதமும் தெரியும். முதலியார் அவர்கள் சில சிங்களச் சொற்கள் சம்பந்தமாகத் தங்கருத்தைச் சிங்கள அகராதி ஆசிரியர்களுக்குக் கூறியதாகவும் அவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டதாகவும் கேள்வி. சிலாசாஸனங்களையும் தோம்புகளையும் வாசிப்பதிலும் நல்ல பயிற்சி யமைந்திருந்தார். அரசாங்கவுத்தியோகத்திலிருந்தபொழுதே சரித்திர சம்பந்தமான பல விஷயங்களையும் தம்முயற்சியால் எளிதிற் பெற்றுக் கொண்டார். முதலியார் அவர்களும் டக்றர் பவுல்பீரிஸ் அவர்களும் கந்தரோடையிற் கிண்டியெடுத்த சிலைகளும் அவற்றால் வெளிவந்த சரித்திரங்களும் கண்டு கிளைவு கூர்தற்பாலன. முதலியார் அவர்கள் அரசாங்க சேவையினின்றும் இளைப்பாறிய பின் கொழும்பில்வாழ ஒருப்பட்டமையே இவை யாவற்றிலும் சிறந்ததெனவேண்டும்.

மறைமலையடிகள் எழுதிய நூலொன்றினை முதலியார் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார்கள். இருவர்கட்கும் நெருங்கிய நட்பும் உண்டாயிருந்தது.

முதலியார் அவர்கள் 'சரித்திர வாராய்ச்சிக் கழகத்தில்' (Historical Manuscripts Commission) அங்கத்தவராயிருந்து பழைய இலங்கையரசர்களின் தமிழ்க் கடிதங்கள் இறந்துபடா வண்ணம் தொகுத்துச் செப்பனிட்டு அரசாங்கத்தாரைக் கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். இக்கொண்டின் சிறப்பைச் சுவாமி வேதாசலம் போன்ற சரித்திர அறிஞர்களே பாராட்டிப் பத்திரிகைகளில் எழுதியிருக்கின்றார்கள். இந்த இடத்திற்கு முதலியார் அவர்களைப்போல ஒருவர் கிடைத்துக் கொள்வது எளிதன்று.

முதலியார் அவர்கள் அரசாங்க ஆசிய சங்கத்தின் (Royal Asiatic Society, C. B.) அங்கத்தவராயிருந்து தமிழரின் பெருமையைக் காப்பாற்றி வந்திருக்கின்றார். முதலியார் அவர்கள் அரசியல் விஷயமாகச் சிங்களரும் தமிழரும் வழக்காடுவதை விரும்பாதிலரெனினும் தமிழரின் பெருமையை வேண்டுமென்றே சிங்களச் சரித்திராசிரியர்கள் மறைக்க முயலுங்கால் அவர்களைக் கண்டித்துத் தமிழர் தம் பெருமையை நிலைநாட்டப் பின்னின்றாரல்லர். இலங்கையரசர்களுட் சிலர் தமிழக் கலப்புடையரெனப் பயமின்றி எடுத்துக் காட்டியவர்களுள் முதலியார் அவர்களும் ஒருவர்.

கொழும்பு புதுமைச்சாலை (Colombo Museum) மேற்பார்வையாளர் குழுவினுள் முதலியார் அவர்களும் ஒருவர். இத்துறையில் முதலியார் அவர்கள் செய்துதொடங்கிய தொண்டு மலர்வதற்கிடையில் அவர்கள் காலஞ் சென்றமை தமிழர் தம் துர்ப்பாக்கியம் என்றே கூறவேண்டும். ஒரு ஞாயிற்றுக்கிழமைகாலை புதுமைச்சாலையிலுள்ள நூல் நிலையத்தைத் நீங்கள் போய்ப் பாருங்கள். நீங்கள் உண்மைத்தமிழர்களாயிருந்தால் உங்கள் வயிறு பற்றி எரியுமென்றே சொல்லவேண்டும். எத்தனை சிங்கள ஏடுகளை அரசினர் பணங்கொடுத்து வாங்கிவைத்திருக்கிறார்கள்? எத்தனை பழைய நூல்களைச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். எத்தனை சிங்களப் புலவர்களும் பௌத்த துறவிகளும் வந்து ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால், தமிழர் கூற்றில் அங்கே செல்லும் தமிழரும் குறைவு. அதிலும் தமிழில் ஆராய்ச்சி செய்பவர்கள் பூச்சியமெனலாம். இன்னும் இந்நிலையத்தில் ஆராய்ச்சி செய்ய எந்த இலங்கையருக்கும் உரிமையுண்டென்பதை அறிந்த தமிழரும் மிகக் குறைவு. இக் குறைவையும் தமிழர் தம் சோம்பலையும் உணர்ந்த முதலியார் அவர்கள் பலரை நெருக்கி விட்டதுமன்றித் தமிழிலும் சில ஏடுகளையும் பழைய நூல்களையும் அரசினர் வாங்குமாறு ஒழுங்குகள் செய்து வந்தார்.

வரும்.

# தமிழ் J S C பரீக்ஷைப் பேறுகள்

1939ம் ஆண்டு நவம்பர் மீ நடந்த

* முதலாம்பிரிவிற் சித்தியெய்தியோர்.

† நாட்டுக்கல்வித் திட்டமுறைச் சாதனை பத்திரம் பெற்றோர்.

## மட்டக்களப்பு

ஆரப்பத்தைச் சைவ வித்.
BC 10 தம்பிப்பிள்ளை P M
12 சம்பியப்பா A K
* 13 சுப்பிரமணியம் K K
14 ராசமணி M K
கல்லடி உப்போடை மெதடிஸ்ற் பாட.
27 இராசதுரை R
28 பூபாலபிள்ளை N
கோட்டைமுனை R. C. G.
48 செபமாலை மேரி M
51 மேரி பிரான்ஸிஸ் A
53 மேரி J
செங்கலடி மெதடிஸ்ற் மிஷன் பாட
55 செல்லத்தங்கம் K
தண்டவான்வெளி R. C. G. பாட.
58 கல்லம்மா P

## சாவகச்சேரி

சாவகச்சேரி சாதனா பாட
CC 3 செபரத்னசிங்கம் A
* 4 இராசரத்தினம் S
11 கனகரத்தினம் N
12 குமாரசாமி M
சங்கத்தானை சைவ வித்தியாசாலை
13 வேலுப்பிள்ளை S
14 கனகலிங்கம் K
16 சோமநாதர் K
17 மாணிக்கம் N
19 சிவப்பிரகாசம் V
* 20 கந்தையனார் P
கல்வயல் இந்துகலவன் பாட
22 சின்னத்தம்பி S
23 சின்னப்பு S
24 இராமலிங்கம் K
* 26 கந்தசாமி V
27 வேலாயுதம் P
28 கோவிந்தர் A
